# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF ASSISTANT SESSION'S JUDGE , SIVAGANGAI

| | | |
|---|---|---|
| Case Number | : | S.C.No. 3/2023 |
| Deposition Of Witness for | : | PW 2 |
| Name | : | **திரு. முத்தையா** |
| Father Name | : | திரு. கார்மேகம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20th January 2026.**

(எதிரி ஆஜர். It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை</u>** :

எனக்கு சொந்த ஊர் பொத்தகுடி கிராமம் ஆகும். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இறந்துப்போன நாகராஜனை தெரியும். கொங்காத்தா என்பவரின் தோட்டை காணமல்போனது சம்பந்தமாக இறந்துபோன நாகராஜனுடன் பிரச்சனை இருந்து வந்தது. கிராமத்தின் சார்பாக பஞ்சாயத்தில் வைத்து தோட்டை கொங்காத்தா என்பவரிடம் வாங்கி கொடுத்தார்கள். அதன் பிறகு இறந்து போன நாகராஜன் கோயம்புத்தூர் சென்று விட்டார். சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக இறந்து போன நாகராஜன் எங்கள் ஊருக்கு வந்தார். களவாணி பயலே இங்கு ஊருக்கு எதற்காக வந்தாய் என்று எதிரிகள் சத்தம் போட்டனர். இறந்து போன நாகராஜன் என்பவரும் கோனமண்டை என்ற கொங்கு வீட்டில் தூக்கு போட்டு இறந்துவிட்டார். கொங்கு என்பவரும் நாகராஜன் தூக்கிட்டு இறந்துவிட்டதாக என்னிடம் கூறினார். நான் போய் பார்த்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விபரத்தை கூறினேன்.

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

இறந்த நபரும் எதிரிகளும் ஒரே சாதியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் வேறு யாதவர் சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். 1முதல் 3 எதிரிகளுக்கும் வெவ்வேறு இடங்களில் வீடு உள்ளது என்றால் சரிதான். 3ம் எதிரி வீட்டிற்கும் 2ம் எதிரி வீட்டிற்கும் இடையே அரைகிலோமீட்டர் இடைவெளி உள்ளது என்றால் சரிதான். தோடு காணாமல்போனது சம்பந்தமாக நடைப்பெற்றதாக சொல்லப்படும் பஞ்சாயத்தில்

நான் கலந்து கொண்டிருந்தேனா என்றால் இல்லை. காணாமல்போனதாக சொல்லப்படும் தோடு எவ்வளவு எடை கொண்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி தோடு காணாமல்போனது குறித்த விபரம் யார் மூலமாக தெரிந்து க்கொண்டேன் என்றால் குறிப்பிட்டு பெயர் தெரியாது. காவல் நிலையத்தில் புகார் ஆனது மறுநாள் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. புகாரை நான்தான் கொடுத்தேன். இறந்துப்போன நாகராஜன் எத்தனை திருமணம் செய்தவர் என்றால் 2 திருமணம் செய்தவர். நாகராஜனின் முதல் மனைவி என்ன ஆனார் என்றால் அவர் கோவித்து கொண்டு நாகராஜனை விட்டு சென்றுவிட்டார். இறந்துப்போன நபரை எதிரிகள் திருட்டு பயலுக ஏன் ஊருக்குள்ள வந்தார் என எங்கு வைத்து எந்த தேதியில் எப்போது பேசினார்கள் என போலீஸ்சார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இறந்துபோன நாகராஜனின் தந்தை நல்லதம்பி கம்யூனிஸ் கட்சியில் இருந்தவர் என்றால் சரிதான். மேற்படி நல்லதம்பி MLA குணசேகரனுக்கு தெரிந்தவர் என்றும் மேற்படிMLA நாகராஜனின் இறப்பு நிகழ்வில் கலந்து கொண்டார் என்றால் சரிதான். நாகராஜன் எதிரிகளை பலிவாங்க வேண்டும் என்பதற்காக 3ம் எதிரி வீட்டில் சென்று தூக்கில் இறந்து விட்டார் என்றால் சரியல்ல. அ.சா.1 கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான் சொன்னது போல்

**சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைப்பெறவில்லை என்றும், போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.**

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2026.01.20 17:13:31 +0530